49 Le 56 கள் 2

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை

இருபத்து மூன்றாவது அறிக்கை

கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்

(மாவட்டப் பட்டியல்)

TRUTH ALONE TRIUMPHS

பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: - 6 MAY 2008

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து மூன்றாவது அறிக்கை

கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்

(மாவட்டப் பட்டியல்)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

		பக்கங்கள்
குழுவின் அமைப்பு	..	iii

அறிக்கை

1. முகவுரை	..	v
2. குழுவின் கூட்டங்கள்	..	v-vi
3. குழுவின் ஆய்வுப் பயணங்கள்	..	vii-xx
4. பொதுக் குறிப்புரைகள்	..	xx

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

கன்னியாகுமரி மாவட்டம்	..	1-39
திருநெல்வேலி மாவட்டம்	..	43-118

இணைப்பு–2

2. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	119-120

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (லால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ் : செயலாளர்

திரு. வெ.சி. சுப்ரமணியன் : கூடுதல் செயலாளர்

திரு. க. பாலசுப்பிரமணியன் : சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்து மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12,13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டது. அவ்வமயம் கன்னியாகுமரியிலுள்ள அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயில், விவேகானந்தர் நினைவுப்பாறை, திருவள்ளுவர் சிலை, காந்திமண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், நவீன கட்டணக் கழிப்பிடம், பேருந்து நிலையம், காவலர்களுக்கான தங்கும் விடுதி, விதைத்துறையின் மூலம் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம், பணக்குடி, ரப்பர் பூங்கா, செண்பகராமன்புதூர், தொடக்க அரசு உயர்நிலைப் பள்ளி, செண்பகராமன்புதூர், காய்கறி சந்தை, வடசேரி அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனை, ஆசாரிப்பள்ளம், மாம்பழத் துறையாறு அணைத்திட்டம், வீட்டுவசதி வாரிய வீடுகள், தக்கலை, பத்மநாபபுரம் அரண்மனை, பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை, என்.வி.கே.எஸ். ஆசிரியர் பயிற்சிப்பள்ளி குலசேகரம், அரசு மேல்நிலைப்பள்ளி குலசேகரம், பேச்சிப்பாறை அணைக்கட்டு, திற்பரப்பு நீர்வீழ்ச்சி தீயணைப்பு நிலையம், பாளையங்கோட்டை, பாதாள சாக்கடைத் திட்டம், திருநெல்வேலி

அரசு சித்த மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி தலைமை மருத்துவமனை, திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம், திருநெல்வேலி ஆவின் பால் பதப்படுத்தும் நிலையம், திருநெல்வேலி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நியாயவிலைக்கடை, அரசினர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பொது நூலகம், ரெட்டியார்பட்டி, அரசு மருத்துவமனை, நாங்குனேரி மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலம், நாங்குனேரி ஆகிய இடங்களைப் பார்வையிட்டது.

3. மேற்சொன்ன மாவட்டங்களில் குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது பேரவையில் அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி 300 உறுதிமொழிகள் மீதான பதிலறிக்கைகளை குழு ஆராய்ந்து அவற்றில் 87 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவாகவும், 11 உறுதிமொழிகளுக்கான பதில்களை படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும், எஞ்சியுள்ள 202 உறுதிமொழிகள் மீது நடவடிக்கைத் தொடரலாம் என்றும் குழு முடிவு செய்யப்பெற்றது.

4. மேற்சொன்ன மாவட்டங்களில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–2 இல் உள்ளன.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்

5. கீழ்க்காணும் உறுதிமொழிகள் தொடர்பாக குழு 2007–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12,13 மற்றும் 14 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் செய்து உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவா என்று நேரிடையாக பார்வையிட்டதுடன் அவ்வுறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. குழு நேரடியாக பார்வையிட்ட சில உறுதிமொழிகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:–

1. உறுதி மொழி எண்.238/2000, 1112/2006 **"கன்னியாகுமரியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறை சென்று வருவதற்கேற்ப வசதிகள் செய்வது குறித்து"**

விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு பார்வையிடச் சென்ற குழுவினரை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக மேலாளர் திரு. சுவர்ணபாண்டியன், சுற்றுலா அலுவலர், திரு. ஹரி ராதாகிருஷ்ணன், பொதுப்பணித் துறையின் கடலரிப்பு தடுப்புக் கோட்ட செயற்பொறியாளர் ஆகியோர் வரவேற்றனர். நினைவுப் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலையைப் பார்வையிடலுக்குப் பின் குழுத் தலைவர் தெரிவித்தாவது:–

26.11.2006 அன்று பொதுக் கணக்குக் குழு கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு ஆய்வுப் பயணத்திற்காக வந்தபோது, விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் இடையே இணைப்புப் பாலம் அமைக்க வேண்டுமென்று அக்குழு பரிந்துரை செய்திருந்ததை சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கையை தொடரலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தார்.

திருவள்ளுவர் மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு சென்று வருவதற்கு வசதியாக இரண்டு நவீன விசைப்படகுகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், திருவள்ளுவர் சிலையை மக்கள் பார்ப்பதற்கு பொதுப் பணித் துறையின்

மூலமாகவே ரூ.40 இலட்சம் அளவில் பணிகளும் கிட்டத்தட்ட ரூ.1 கோடியில் படிக்கட்டுகள், பாதுகாப்புச் சுவர்கள் கட்டும் பணியும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கன்னியாகுமரி படகு போக்குவரத்தில் பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.2 கோடி நிதி தற்போது இருப்பதாகவும், முன்னுரிமை அடிப்படையில் தேவையான நிதியை உடனடியாக ஒதுக்கி மக்கள் பாதுகாப்பாகச் சென்று திருவள்ளுவர் சிலையை கண்டுகளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது என்றும், குழுவின் கூட்டம் சென்னையில் கூடுகிறபோது துறையின் செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளிடம் இது குறித்து விவாதிக்கும் என்றும், அதுவரையில் இவ்வறுதிமொழியை நிலுவையில் வைக்கலாம் என குழு முடிவு செய்தது.

2. உறுதிமொழி எண்.1073/2006 **" கன்னியாகுமரியிலுள்ள காந்தி நினைவு மண்டபத்தில் பழுதுகள் நீக்கப்படுவது மற்றும் கடலோரத் தடுப்புச் சுவர்கள் கட்டுவது குறித்து"**

கன்னியாகுமரியிலுள்ள காந்தி நினைவு மண்டபத்திற்கு சென்றபோது குழுவினரை பொதுப் பணித் துறையின் செயற்பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் உதவிப் பொறியாளர் திரு. மணிவண்ணன், ஆகியோர் வரவேற்று கீழ்க்கண்டவாறு விளக்கினார்கள்.

மண்டபத்தின் வெளிப்பகுதியிலே ரூ.3 இலட்சம் செலவில் டைல்ஸ் பதிக்கப்பட்டுள்ளது என்றும், வெளிப்புறம் பெயிண்டிங் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த ஆண்டு ரூ.25 இலட்சம் செலவில் வெளிப்புற நடைப்பாதையை சிமெண்ட் கட்டைகள் கொண்டு சீரமைத்தல், கழிவறைக்குத் தண்ணீர் வசதி, மண்டபத்தின் மேற்கூரையைப் பழுதுபார்த்தல், மண்டபமுகப்பு வளைவு கிரானைட் கற்கள் பதித்தல் ஆகிய பணிகள் செய்யப்பட்டன என்றும், கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.13.50 இலட்சத்திற்கு தயார் செய்து தலைமைப் பொறியாளர் பொதுப் பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு) மதுரை மண்டலம் அவர்களுக்கு

அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. காந்தி நினைவு மண்டபத்திற்கு பக்கத்திலுள்ள பகுதியில் குழந்தைகள் விளையாடுவதற்கு பார்க் வசதியும் இல்லை. எவ்வித பராமரிப்பும் இல்லாமல் இருப்பதற்கு குழு தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறதென்றும் பேரூராட்சி உதவி இயக்குநர் மற்றும் ஏனைய அலுவலர் பெருமக்களும் Mass cleaning செய்து புகைப்படம் எடுத்து குழுவிடம் காண்பிக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது. பின்னர் குழு பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தை பார்வையிடச் சென்றது.

3.உறுதிமொழி எண்.1074/2006 **" கன்னியாகுமரியிலுள்ள பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தை சீர் செய்வது குறித்து"**

குழுவை செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ஹரிராம் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. விஜயகுமார் ஆகியோர் வரவேற்றனர்.

மணிமண்டபம் பராமரிப்பு இல்லாமல் இருப்பதை அறிந்த குழுத்தலைவர், நகராட்சி ஆணையர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் இதில் கவனம் செலுத்தி மணிமண்டபத்தை உடனே சுத்தப்படுத்த வேண்டும் என்றதற்கு, வெளிப்புறம் பெயிண்டிங் செய்யும்போது எல்லா வேலைகளையும் செய்து விடுவோம் என்றனர்.

பின்னர் குழு அங்கிருந்து புறப்பட்டது.

4. உறுதிமொழி எண். 1158/2006 **" கன்னியாகுமரியில் காவலர்களுக்கான தங்கும் விடுதி கட்டப்படுவது குறித்து"**

கன்னியாகுமரியில் காவலர்களுக்கான தங்கும் விடுதியை பார்வையிடச் சென்ற குழுவினரை மாவட்ட காவல்துறை கண்காணிக்காளர் திரு.சந்தோஷ்குமார், இ.கா.ப., அவர்கள் வரவேற்று காவலர்களுக்கான தங்கும் விடுதியை சுற்றி காண்பித்தார். விடுதி சுமார் ரூ.7 இலட்சம் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதிக் கழகத்தினால் கட்டப்பட்டு 22.08.2007 அன்று காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

பின்னர் குழுத்தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்:

மாவட்ட ஆட்சித் தலைவருடன் குழு காவலர்களுக்கான தங்கும் விடுதி சுமார் ரூ.7 இலட்சம் செலவில் நல்ல முறையில் கட்டப்பட்டுள்ளதை பார்வையிட்டது. காவல்துறைக்கு குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது என்றும் இவ்வுறுதிமொழி நிறைவேற்றப்பட்டதாக கருதப்படுகிறது என தெரிவித்தார்.

5. உறுதிமொழி எண். 484/2003 **"நாகர்கோவில் அருகில் இரப்பர் வாரியம் மற்றும் தனியாருடன் இணைந்து இரப்பர் பூங்கா ஒன்று அமைப்பது குறித்து"**

செண்பகராமன்புதூர் சென்றடைந்த குழுவை திட்ட இயக்குநர் திரு.விஜயகுமார் வரவேற்றார். குழு ரப்பர் பூங்கா அமையவுள்ள இடத்தைப் பார்வையிட்டபின் தலைவர் தெரிவித்தாவது :

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த ரப்பர் பூங்கா அமைக்கும் பணி தனியார் மற்றும் TIDCO நிறுவனம் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் இந்த பூங்காவை அமைப்பதற்கு தேவையான 115 ஏக்கர் நிலத்தில் 102 ஏக்கர் கையப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் கையகப்படுத்துவதற்கு உதவியதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், Tamil Nadu Industrial Rubber Park Limited என்ற நிறுவனம் இந்தப் பூங்காவை அமைக்கவிருக்கிறது என்றும், ரப்பர் பூங்கா அமைப்பதற்கு 30 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும், அதில் 6 கோடி ரூபாயை மத்திய, மாநில அரசுகள் நிதி உதவியாகத் தர விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் டிசம்பர் 2008–ல் சிறு சிறு தனியார் நிறுவனங்கள் ரப்பர் பூங்காவில் தங்கள் தொழிற்சாலைகளை அமைக்கும் என்றும் திட்ட இயக்குநர் தெரிவித்தார். இப்பூங்கா அமைவதன் மூலம் 2000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 3000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த திட்டம் பயன்பாட்டிற்கு வந்தபின் மாவட்ட அட்சித் தலைவர் மூலமாக அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

6. உறுதி மொழி எண். 176/2001 மற்றும் 30/2002 "கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்து"

அரசு மருத்துவக் கல்லூரியை பார்வையிடச் சென்ற குழுவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் சிவாஞ்சலின் நேச ரத்னாபாய் மற்றும் மருத்துவர்கள் வரவேற்றனர்:

குழு புற நோயாளிப் பிரிவு, இ.சி.ஜி அறை சிடி.ஸ்கேன் அறை பிரசவ வார்டு, அமர்வு அறை ஆகியவற்றை பார்வையிட்டது. பின்னர் குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்கிற உறுதிமொழியை ஆய்வு செய்கின்ற வகையில் இன்றைக்கு அரசு மருத்துவக் கல்லூரியைக் குழு பார்வையிட்டது. கிட்டத்தட்ட ரூ.45 கோடி செலவில் பொதுப்பணித் துறையின் மூலமாக கட்டமைப்பு வசதிகளும் மருத்துவமனைக்கான உபகரணங்களும் வாங்கப்பட்டு தற்போது 400 மாணவர்கள் பயன்பெறுவதாகவும், 300 மாணவர்கள் பட்டயப் படிப்பில் பயின்று வருவதாகவும், மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவிக்கிறார் என்றும், இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 1115 ஊழியர்கள் ஒப்பளிப்பு செய்துள்ள அரசு அதில் கிட்டத்தட்ட 325 பணியாளர்கள் இடங்கள் காலியாக இருப்பதை கண்டு வியப்பு அடைந்தது.

இங்கு போதுமான குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர "சின்டெக்ஸ் டேங்க்" அமைத்து பொதுமக்கள் குடிக்கிற வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தர வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறது என்றார். மேலும் காலியாக உள்ள 375 பணியிடங்களை உடனடியாக நிரப்ப தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக அரசை குழு கேட்டுக்கொள்கிறது என்றார். மேலும், இங்கு M.R.I. Scan கருவி இல்லாததை கண்ட குழு, உடனடியாக எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வாங்கி நிறுவ வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறதென்றும் 27.11.2007 ஆம் தேதியில் சென்னையில் நடைபெறும் குழுக்கூட்டத்தில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வாங்குவது குறித்தும் துறைச் செயலாளருடன் குழு ஆய்வு செய்யும் என்றார்.

மேலும், அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வருகிற நோயாளிகள் வேறு வார்டுக்கு மாற்றுகின்றபோது மழையில் நனையாதவாறு செல்ல ஆஸ்பெஸ்டாஸ் கூரை தகடுகள் வேய்ந்து தர மதிப்பீட்டை பொதுப்பணித் துறை அதிகாரிகள் உடனடியாக தயார் செய்து கல்லூரி முதல்வரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்டவரிடம் ஒப்புதலைப்பெற்று உடனடியாக ஆஸ்பெஸ்டாஸ் கூரை தகடுகள் வேய குழு பரிந்துரை செய்கிறது என்றார்.

7. உறுதிமொழி எண். 887/2003 "கன்னியாகுமரி மாவட்டம் பத்மனாபபுரம் தொகுதி மாம்பழத்துறையாறு அணைகட்டும் திட்டம் குறித்து"

மாம்பழத்துறையாறு அணைத் திட்டப் பணிகளை பார்வையிடச் சென்ற குழுவை பொதுப் பணித் துறையின் செயற்பொறியாளர் திரு.கணேச மரச்சான், Rock and Ark construction நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.மனோகரன், ஆகியோர் வரவேற்றனர். பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு ஆய்வின்போது உடனிருந்தார்.

திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தபின் குழுத் தலைவர் தெரிவித்தாவது:

கடந்த 1996–2001 ஆம் ஆண்டில் ஆட்சியில் 9.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது 14 கோடி ரூபாயில் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்றும், 2008 ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்குள் பணி முடிவடையும் என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், சுமார் 29 ஏக்கர் பரப்பளவில் அணை அமைக்கப்பட்டு உள்ளது என்றும், வருடத்திற்கு 5 முறை நீரை தேக்கி வைக்க இயலும் என்றும், 45 MCMT அளவுக்கு தண்ணீர் சேமித்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சேமிக்கப்பட்ட நீர் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குழு அங்கிருந்து புறப்பட்டு சென்றது.

8. உறுதிமொழி எண். 871/2005 **"பத்மநாபபுரம் கோட்டைச் சுவர்கள் பழுது ஏற்பட்டுள்ளதை சீர் அமைப்பது குறித்து"**

பத்மநாபபுரம் அரண்மனையை சென்றடைந்த குழுவை மாவட்ட தொல்லியல் அலுவலர் திரு.சாந்தலிங்கம் வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ரா. லீமாரோஸ் உடனிருந்தார்.

அரண்மனையை பார்வையிட்ட பின் குழுத் தலைவர் தெரிவித்தாவது:

கோட்டை சுவரை 50 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைப்பதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கோட்டை சுவரை பாதுகாக்கும் வகையில் தேவையான நிதியை ஒதுக்க வேண்டுமென்று அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது என்றார்.

பின்னர் குழு அங்கிருந்து புறப்பட்டு சென்றது.

9. உறுதிமொழி எண். 595/2006 **"கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, அதிநவீன கருவிகளுடன் அமைப்பது குறித்து"**

அங்கு சென்ற குழுவை R.M.O. டாக்டர் கே.சி. மோகன், அவர்கள் வரவேற்றார். மருத்துவமனையைப் பார்வையிட்பின் குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் 96 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ பிளாக் ஒன்று முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாடு இல்லாமல் வெறுமனே இருக்கிறது என்றும், அந்த கட்டிடங்களை திறந்து வைத்து மக்கள்

பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது. மேலும், ரூ.40 இலட்சம் செலவில் 24 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. குடிநீர் வசதி மற்றும் இதர வசதிகளை எல்லாம் மருத்துவமனை அலுவலர்கள் உடனடியாக செய்து தர வேண்டும் என்று குழு கேட்டுக்கொள்கிறது. மருத்துவமனை சுத்தமாக வைத்திருக்கிறார்கள், இதே மாதிரி தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்றும் மருத்துவமனைக்கு தரமான அரிசியை வழங்க அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று வட்ட வழங்கல் அலுவலரை குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

10. உறுதிமொழி எண். 751/2007 மற்றும் 770/2007: **"கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலிருந்து கடைமடை வரை இருக்கின்ற சானல்களை தூர்வாருதல் குறித்து".**

பேச்சிப்பாறை அணையை பார்வையிடச் சென்ற குழுவை பொதுப்பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் திரு.சிரில் கிறிஸ்டோபர் வரவேற்றார். அணையை பார்வையிட்ட பின்பு குழுத் தலைவர் தெரிவித்தாவது:

பேச்சிப்பாறை அணையில் 41/2 டி.எம்.சி. நீர் தேக்கி வைக்கப்பட்டு 96 ஆயிரம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறுவதாகவும், நீர் பிடிப்பு பகுதியில் மணல் திட்டுகள் இருப்பதாகவும் அவற்றை அகற்ற வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ரா. லீமா ரோஸ் தெரிவித்துள்ளார். அணையில் நீர் இல்லாத சமயத்தில்தான் மராமத்துப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்று செயற்பொறியாளர் தெரிவித்தார். தூர் வாருவதற்காக நிதி கோரப்பட்டதாகவும், நிதித்துறையின் ஒப்புதல் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து சென்னையில் குழுவின் கூட்டம் நடைபெறும்போது, பொதுப்பணித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் மற்றும் பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியாளர் ஆகியோருடன் குழு விவாதிக்கும் என்றார்.

பின்னர் குழு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

11. உறுதிமொழி எண். 659/2006 **"கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் ரோப் கார் அமைப்பது குறித்து"**

திற்பரப்பு நீர்வீழ்ச்சியை அடைந்த குழுவினரை பேரூராட்சி தலைவி திருமதி பிரேமா ஜெயின், செயல் அலுவலர், திரு. ஜார்ஜ் தானுமூர்த்தி ஆகியோர் வரவேற்றனர். திற்பரப்பு நீர்வீழ்ச்சியை பார்வையிடலுக்குப் பின் குழுத் தலைவர் தெரிவித்தாவது.

இங்கு ரோப் கார் வசதி செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்பதை குழு அறிகிறது. சிறப்பு விருந்தினர்களுக்காக கட்டப்பட்டுள்ள தங்கும் அறையை நீர் சூழ்ந்து விடுவதால் வேறு இடத்தில் தங்கும் அறை கட்ட ஆவன செய்ய வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறது என்றும் நீர் வரத்து குறைவாக இருப்பதாகவும், எனவே, தூர் வாருவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கு குழு, வறட்சி காலத்தில் நீர் இல்லாத போது தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது என்றும், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் குடில்கள் அமைப்பதற்கான திட்டத்தை தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொண்டது.

பின்னர் குழு அங்கிருந்து புறப்பட்டு சென்றது.

குழு திருநெல்வேலியில் தனது ஆய்வுப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் முதலில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மரியாதை நிமித்தமாக அவரது இல்லத்தில் சந்தித்து, சிறிது சேர உரையாடலுக்குப் பின் குழு அங்கிருந்து புறப்பட்டு சென்று கீழ்க்கண்ட உறுதிமொழிகள் குறித்து சில இடங்களை குழு நேரிடையாக பார்வையிடச் சென்றது.

12. உறுதிமொழி எண். 391/2006 **" திருநெல்வேலியில் பாதாள சாக்கடைத் திட்டம் துரிதப்படுத்துவது குறித்து"**

திருநெல்வேலியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ் செயல்படும் நீரேற்று நிலையத்தை சென்றடைந்த குழுவை மாநகராட்சி ஆணையர் திரு.மோகன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேற்பார்வைப் பொறியாளர் திரு. பிரைட் செல்வன், ஆகியோர் வரவேற்றனர். நீரேற்று நிலையத்தை பார்வையிட்ட பின் குழுத் தலைவர் தெரிவித்தாவது:

திருநெல்வேலி மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை ஆய்வு செய்த குழு, 52 கோடி ரூபாய் செலவில் 34 வார்டுகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றும், தேசிய குடிநீர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 52 கோடி ரூபாய் நிதி உதவியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதென்றும் மீதமுள்ள 17 வார்டுகளுக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதி உதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 17 வார்டுகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து குழு சென்னையில் கூடும்போது அரசுச் செயலாளர் மற்றும் துறையின் உயர் அதிகாரிகளுடன் குழு விவாதிக்கும் என்றார்.

13. உறுதிமொழி எண். 567/2006 **" திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயை கண்டறியும் நவீன M.R.I. Scan வசதியை ஏற்படுத்துவது குறித்து"**

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியை சென்றடைந்த குழுவை முதல்வர் டாக்டர் விநாயகம், வரவேற்றார்.

பார்வையிடலுக்குப் பின் குழுத் தலைவர் தெரிவித்ததாவது:

பெட்சீட், தலையணை போன்றவை அனைத்து படுக்கைகளுக்கும் அளிக்கப்படவில்லை என்றும் 100–க்கும் மேற்பட்ட படுக்கைகள் மோசமான நிலையில் இருப்பதாகவும் அவற்றை உடனடியாக மாற்றுவதற்கு முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குழு கேட்டுக் கொள்கிறதென்றும், இப்பணியை முடித்து அது குறித்த அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டது.

போதுமான குடிநீர் வசதி இல்லையென்று நோயாளிகளும் அவர்களின் உறவினர்களும் புகார் தெரிவித்துள்ளதையடுத்து நான்கு இடங்களில் 'சின்டெக்ஸ்' தொட்டி அமைத்து குடிநீர் வழங்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது.

M.R.I. Scan கருவி 4 1/2கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது என்றும், நோயின் தன்மையைப் பொறுத்து ரூ.3,500/–வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறதென்றும், இத்தொகை அதிகமானதாக குழுக் கருதுகிறது என்றும் எனவே, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இத்தொகையை குறைக்க வேண்டுமென்று அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது என்றார்.

பின்னர் அங்கிருந்து குழு புறப்பட்டு சென்றது.

14. உறுதிமொழி எண். 710/2007 **" திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரிக்கு நோய்கள் மற்றும் நுண்ணுயிர் ஆய்வகங்கள் ஆரம்பிப்பது குறித்து"**

குழு அரசு சித்த மருத்துவமனையை சென்றடைந்தபோது முதல்வர் திரு.தினகரன் மற்றும் பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் திரு.சீனிவாசன் ஆகியோர் குழுவை வரவேற்றனர்.

மருத்துவமனையை பார்வையிடலுக்குப் பின்னர் குழுத் தலைவர் தெரிவித்ததாவது:

உள் நோயாளிகள் பகுதியில் படுக்கை வசதிகள் இல்லை. மருத்துவமனை ஆரோக்கியமான முறையில் இல்லாததைக் கண்டு குழு வேதனையடைகிறது என்றும் மேலும், கட்டில் படுக்கைகள் ஆகியவை மிகவும் பழுதடைந்து காணப்பட்டதை குழு உண்மையிலேயே அதிர்ச்சியடைந்தது என்றும் நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிதியாக ஆண்டொன்றுக்கு இந்த மருத்துவக் கல்லூரிக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டும் கூட கல்லூரி முதல்வர் அவர்கள், இதுவரையிலும் ஒரு ரூபாய் கூட பராமரிப்பிற்காக செல்வளிக்கவில்லையென குழு கண்டறிந்தது. உடனடியாக கொசுவலைகள், மின்விசிறிகள், விளக்குகள், கட்டில்கள், படுக்கைகள் இவற்றையெல்லாம் மாற்றும் வகையில் பொதுப்பணித் துறைக்கு நிதியைக் கொடுத்து அவ்வதிகாரிகள் பராமரிப்பு பணிகளை செய்துதர வேண்டுமென்றும், அவ்வாறு செய்து தரவில்லையெனில் மெத்தனமாக இருந்ததற்காக அவர்களை பணி இடைநீக்கம் செய்ய குழு பரிந்துரை செய்யும் என்றும் சென்னையில் குழு கூடுகிறபோது சித்த மருத்துவக் கல்லூரிக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதியை ஒதுக்க குழு பரிந்துரை செய்யும் என்றார்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

15. உறுதிமொழி எண். 752/2006 **" திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 5 ஆண்டுகளில் படிப்படியாக பால் உற்பத்தியை பெருக்கவும் விற்பனையை மேம்படுத்தவும் தளவாடங்களை உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது குறித்து"**

ஆவின் பால் பதப்படுத்தும் நிலையம் சென்றடைந்த குழுவை மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி. சிராஜ், மேலாளர் (உற்பத்தி) திரு.பாலாஜி, தரக்கட்டுப்பாட்டு அலுவலர், டாக்டர் சொர்ணகுமார் ஆகியோர் வரவேற்றனர்.

பார்வையிடலுக்குப் பின் குழுத் தலைவர் தெரிவித்ததாவது:

நவீன முறையில் ஆலை அமைப்பதற்கான கட்டிடம் கட்டுவதற்காக ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டிருக்கிறதென்றும் 31.10.2007 வரை 1.34 கோடி ரூபாய் இதற்காக செலவிடப்பட்டிருக்கிறதென்றும் Aavin Milk Federation மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

16. உறுதிமொழி எண். 558/2006 **" திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் உயர் தொழில்நுட்ப பூங்காவில் 250 ஏக்கர் பரப்பளவில் பார்மா பார்க் அமைப்பது குறித்து"**

உயர் தொழில்நுட்ப பூங்கா அமையவிருக்கும் இடத்தை பார்வையிடச் சென்ற குழுவை கிளை மேலாளர் திரு. முத்துக்குமார், வரவேற்றார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

2004 ஆம் ஆண்டு வரையிலும் பல்வேறு கட்டங்களில் 2000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டதென்றும், முதல் கட்டமாக 250 ஏக்கர் 'சிட்கோ' மூலம் 'பார்மா பார்க்' அமைக்க இருப்பதாகவும் அதிகாரபூர்வமாக இன்னும் அரசாணை வரவில்லை என்றும், 103 விண்ணப்பங்கள் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு இடம் கேட்டுள்ளார்கள் என்றும், 2001–லிருந்து எந்த பணியும் நடைபெறவில்லை என்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நான்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எச். வசந்தகுமார் அவர்களும் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமையவிருக்கும் இடத்தில் சுமார் 103 மருந்து கம்பெனிகள் தங்கள் தொழிற்சாலைகளை ஏற்படுத்த மனு செய்திருப்பதாகவும், இதற்கான அதிகாரப்பூர்வமான அரசாணை இன்னும் வரவில்லை என்றும் தெரிவிக்கிறார்கள். இந்நிலையில் இவ்வறுதிமொழி குறித்து சென்னையில் நடைபெறும் குழுக் கூட்டத்திற்கு துறைச் செயலாளர், 'டிட்கோ மேலாண்மை இயக்குநர்' மற்றும் துறையைச் சார்ந்த இதர அலுவலர்களை அழைத்து குழு நேரில் விளக்கம் பெறப்படும் என குழுத் தலைவர் தெரிவித்தார்.

பொதுக் குறிப்புரைகள்

5. ஆய்வும் பயணங்களின்போது குழுக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என குழு வலியுறுத்துகிறது.

6. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய நேரத்தில் மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

7. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009.
29 ஏப்ரல் 2008,
சித்திரை, 17
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்
தலைவர்
அரசு உறுதிமொழிக் குழு.



கன்னியாகுமரி மாவட்டம்

இணைப்பு – I

கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மற்ற பிரிவிற்கு செலவிடுவதை தவிர்ப்பதற்கும், பனைபொருள் ஆராய்ச்சி போன்ற மற்ற தொழில்களுக்கு இந்நிதியைப் பயன்படுத்தி மலைவாழ் மக்களின் நலனை மேம்பாடு அடைவதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்து.

1. வரிசை எண்.	1
2. துறையின் பெயர்	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
3. உறுதிமொழி எண்.	209/2002
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மற்ற பிரிவிற்கு செலவிடுவதை தவிர்ப்பதற்கும், பனைபொருள் ஆராய்ச்சி போன்ற மற்ற தொழில்களுக்கு இந்நிதியைப் பயன்படுத்தி மலைவாழ் மக்களின் நலனை மேம்பாடு அடைவதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	4690
நாள்	24.04.2002
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

...மலைவாழ் மக்களுடைய நலனுக்கான ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி மற்ற பிரிவிற்கு செலவிடப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது என்றால் அது முறைகேடான ஒன்று. அது கடந்த காலத்தில் எப்படி நடந்தது என்பதனை கண்டுபிடித்து தக்க நடவடிக்கை கட்டாயம் இந்த அரசு எடுக்கும்...

பனைத் தொழிலாக இருந்தாலும், எந்தத்தொழிலாக இருந்தாலும் மலைவாழ் மக்களுக்கு அந்தப்பணம் சென்றடையக்கூடிய அளவிற்கு ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை மேற்கொள்ள அரசு தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் கட்டாயம் ஈடேறும்.

8. துறையின் பதில்	கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படும் நிதி பிற பிரிவினருக்கு செலவிடப்படுவதில்லை. பழங்குடியினர் நலத் திட்டங்களில் எந்த திட்டங்களில் அரசால் நிதி ஒதுக்கப்படுகிறதோ அத்திட்டங்களில்தான் அந்நிதி முற்றிலும் செலவிடப்படுகிறதென தெரிவிக்கப்படுகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் G.H. மருத்துவமனையில் ஓர் ஆர்த்தோ ஸ்பெசலிஸ்டு நியமிப்பது குறித்து.

1. வரிசை எண்.	2
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	131/2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் G.H. மருத்துவமனையில் ஓர் ஆர்த்தோ ஸ்பெசலிஸ்டு நியமிப்பது குறித்து.
5. 2003–2004ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	04.04.2003
6. உறுப்பினர் பெயர்	–
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் ... குழித்துறையில் G.H.–க்கு நிச்சயமாக ஓர் ஆர்த்தோ ஸ்பெசலிஸ்டு நியமிக்கப்படுவார்.
8. துறையின் பதில்	குழித்துறை அரசு மருத்துவமனையில் ஆர்த்தோ மருத்துவர் நியமிக்கப்பட்டு 28.10.2003 முதல் பணிபுரிந்து வருகிறார். எலும்பு சம்மந்தமான நோய்களுக்கு குழித்துறை, அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10.குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை, சாமுண்டீஸ்வரி திருக்கோயில் பராமரிப்பின்றி பழுதுபட்டுள்ளதால் அதை பராமரிக்கவும், கோயிலில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்பவும் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து.

1. வரிசை எண்.	3
2. துறையின் பெயர்	தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3. உறுதிமொழி எண்.	195/2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை, சாமுண்டீஸ்வரி திருக்கோயில் பராமரிப்பின்றி பழுதுபட்டுள்ளதால் அதை பராமரிக்கவும், கோயிலில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்பவும் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	8410
நாள்	07.04.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர். ...அரசினுடைய நிதியில் செய்ய வாய்ப்பு இருக்குமேயானால் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.
8. துறையின் பதில்	சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிர்வாகத்திற்குட்பட்ட அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன் ஆலயம் ஒரு சிறிய திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் குழித்துறையில் அமையப்பெற்று சிறப்பு வாய்ந்ததாக திகழ்கிறது. இத்தைய சிறப்பு வாய்ந்த திருக்கோயிலுக்கு திருப்பணி வேலைகள் செய்யும் பொருட்டு குழித்துறை ஸ்ரீமாகதேவர் நேத்ர சம்ரிஷ்ண சமிதி முன் வந்தது.

இதன்படி இவ்வலுலக துணை ஆணையர் / செயல் அலுவலரின் ந.க.6788/01/ஜி4/நாள்: 06.10.2003–ன்படி திருப்பணிகள் உபயமாக செய்ய அனுமதி வழங்கப்பட்டு கீழ்கண்ட திருப்பணிகள் நிறைவேறப் பெற்றுள்ளது.

வ. எண்.	திருப்பணி வேலை விபரம்	நிதி ஆதாரம்
1.	அருள்மிகு சாமுண்டிஸ்வரி அம்மன் சன்னதி திருப்பணி	உபயதாரர் நிதி
2.	அருள்மிகு கணபதி சன்னதி திருப்பணி	உபயதாரர் நிதி
3.	அருள்மிகு பள்ளியறைக்கல் பகவதி சன்னதி திருப்பணி	உபயதாரர் நிதி
4.	அருள்மிகு குளக்கடற்கரை சன்னதி திருப்பணி	உபயதாரர் நிதி
5.	நமஸ்கார மண்டபம் திருப்பணி	உபயதாரர் நிதி
6.	திருப்பள்ளி மற்றும் ஸ்டோர் ரூம் திருப்பணி	உபயதாரர் நிதி
7.	திருக்கிணறு	உபயதாரர் நிதி

மேற்படி திருப்பணிகள் அனைத்தும் உபயதாரர்களால் ரூ.8.00 லட்சத்திற்கு செய்து முடிக்கப்பட்டும் திருக்கோயில் வளாகம் விரிவுப்படுத்தப்பட்டும் 17.06.2007 அன்று கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றுள்ளது.

மேலும், மேற்படி திருக்கோயிலுக்கு புதிதாக ஒரு சாந்தி பணியாளரை இதர திருக்கோயிலில் இருந்து இடமாற்றம் செய்து பணி அமர்த்தப்பட்டுள்ளது.

9. குழு ஆய்வு செய்த நாள் 12.11.2007

10.குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.

திருப்பதி சாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் சீரக சம்பா நெல் சாகுபடியை மேம்படுத்துவது மற்றும் இருவழி மரவு முறையில் வீரிய ஒட்டு நெல் உருவாக்குதல் குறித்த ஆராய்ச்சி மேற்கொள்வது குறித்து.

1. வரிசை எண்.	4
2. துறையின் பெயர்	வேளாண்மைத்துறை
3. உறுதிமொழி எண்.	342 / 2003
4. பொருள்	திருப்பதி சாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் சீரக சம்பா நெல் சாகுபடியை மேம்படுத்துவது மற்றும் இருவழி மரபு முறையில் வீரிய ஒட்டு நெல் உருவாக்குதல் குறித்த ஆராய்ச்சி மேற்கொள்வது குறித்து.
5. 2003–2004ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
நாள்	24.04.2003
6. உறுப்பினர் பெயர்	–
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத்துறை அமைச்சர்
	... ரூ.15.6 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திருப்பதி சாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் சீரக சம்பா நெல் சாகுபடியை மேம்படுத்துதல் குறித்து ஆராய்ச்சியும் இருவழி மரபு முறையில் வீரிய ஒட்டு நெல் உருவாக்குதல் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	எண்.324 திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பாரம்பரிய சீரகச் சம்பாவும் ஆடுதுறை 43 நெல் இரகமும் ஒட்டு சேர்க்கப்பட்டன. சீரகச் சம்பாவை விட 75 சதம் வரை அதிக விளைச்சல் தரக்கூடிய பல உயர்விளைச்சல் இரகங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்த மேம்படுத்தப்பட்ட இரகங்கள் திருப்பதிசாரம்,

அம்பை, திருச்சி, ஆடுதுறை ஆகிய இடங்களில் கருவூலத்தில் சேர்க்கப்பட்டு கருவூட்டுக்காக பயன்படுத்தப்பட்டன. இருவழி மரபு முறையில் திருப்பதிசாரம் 1050 இரகத்துடன் எண்.98179 மற்றும் 99017 கருவூட்டு செய்யப்பட்டன.

இதிலிருந்து பெறப்பட்ட திருப்பதிசாரம் 1 வீறிய ஒட்டு நெல் மற்றும் திருப்பதிசாரம் 2 வீறிய ஒட்டு நெல்லிருந்து உயர்விளைச்சல் நெல் உருவாக்கும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திருப்பதிசாரம் 4 என்ற புதிய நெல் உருவாக்கப்பட்டது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 12.11.2007

10.குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கன்னியாகுமரி மாவட்டம் வேர்கிளம்பி, பொன்மனை, குலசேகரம், குமாரபுரம், விலவூர், கோதநல்லூர், நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மேற்கொள்வது குறித்து.

1. வரிசை எண்.	5
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	408 / 2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம் வேர்கிளம்பி, பொன்மனை, குலசேகரம், குமாரபுரம், விலவூர், கோதநல்லூர், நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மேற்கொள்வது குறித்து.
5. 2003–2004ஆம் ஆண்டுக்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	 29.04.2003
6. உறுப்பினர் பெயர்	–
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் ... ரூ.13 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி, பொன்மனை, குலசேகரம், குமாரபுரம், விலவூர், கோதநல்லூர், நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	வேர்கிளம்பி, பொன்மனை, குலசேகரம், குமாரபுரம், விலவூர், கோதநல்லூர், நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் 26 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 123 குடியிருப்புகளிலும் உள்ள மொத்தம் 1,19,219 மக்களும் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட

குடிநீர் வழங்கல் ரூ.1286 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு அனைத்து பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வசதி வழங்கப்பட்டு வருகிறது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 12.11.2007

10. குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 20 பேரூராட்சிகளில், ஆண்களுக்காக 20 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் அமைப்பது குறித்து.

1. வரிசை எண்.	6
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	424 / 2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 20 பேரூராட்சிகளில், ஆண்களுக்காக 20 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் அமைப்பது குறித்து.
5. 2003–2004ஆம் ஆண்டுக்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	29.04.2003
6. உறுப்பினர் பெயர்	–
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர் ... ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 20 பேரூராட்சிகளில் ஆண்களுக்காக 20 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் அமைக்கப்படும்.
8. துறையின் பதில்	கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்கண்ட பேரூராட்சிகளில் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் 2003–ம் வருடம் (ஒவ்வொரு பேரூராட்சியிலும் ரூ.2.00 இலட்சம்) ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சி பொது நிதி மூலமாக கட்டப்பட்டுள்ளது.

1) கன்னியாகுமரி 2) புத்தளம்
3) தென்தாமரைக்குளம் 4) தெங்கம்புதூர்
5) திங்கள் நகர் 6) மணவாளக்குறிச்சி
7) விலாவூர் 8) கோதநல்லூர்
9) திற்பரப்பு 10) களியாக்காவிளை
11) பொன்மனை 12) வில்லுக்குறி,
பேரூராட்சிகள்

9. குழு ஆய்வு செய்த நாள் 12.11.2007

10.குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்து தர வேண்டியதன் அவசியம் குறித்து

1. வரிசை எண்.	7
2. துறையின் பெயர்	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
3. உறுதிமொழி எண்.	451 / 2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்து தர வேண்டியதன் அவசியம் குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண்	30420
நாள்	30.04.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர். ...குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நல்ல இடமாக/உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதுப் போல் அந்த விளையாட்டு வளாகம் நல்லமுறையில் அமைத்துத் தரப்படும்
8. துறையின் பதில்	கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில், அண்ணா விளையாட்டு அரங்கம், நாகர்கோவில் மையப்பகுதியில் உள்ளது. மொத்த பரப்பளவு 10.5 ஏக்கர் ஆகும். இவ்விளையாட்டு அரங்கம் அதனைச் சார்ந்த கட்டிடங்கள் 1975–ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் முதலானோர் இவ்விளையாட்டு அரங்கில் நாள்தோறும் பயிற்சி பெற்று வருகின்றனர். தினமும் 200–க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் ஆண்கள், பெண்கள் முதலானோர் கலந்து கொள்கிறார்கள். இவ்விளையாட்டு அரங்கில் கீழ்கண்ட விளையாட்டு வசதிகள் உள்ளன.

1.	400மீ. தடகள ஓட்டப்பாதை
2	இயற்கை கால்பந்து புல்வெளி மைதானம்
3.	கைப்பந்து மைதானம்
4.	கூடைப்பந்து மைதானம் – கான்கிரீட்–1
5.	கபடி மைதானம்–2
6.	கோ.கோ. மைதானம்–1
7.	Gym Fitmess Ventre-1
8.	ஸ்குவாஷ் உள் விளையாட்டு அரங்கம்
9.	குத்துச்சண்டை மேடை
10.	மேஜைப்பந்து உள் விளையாட்டு அரங்கம்
11.	சதுரங்க பயிற்சி மையம்
12.	ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி யோகா பயிற்சி மையம்

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட அளவிலான விளையாட்டு வளாகம் உள்ளது.

9. குழு ஆய்வு செய்த நாள் 12.11.2007

10.குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு பள்ளியில் டென்னிஸ் அகாடமி ஆரம்பிப்பது குறித்து

1. வரிசை எண்.	8
2. துறையின் பெயர்	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
3. உறுதிமொழி எண்.	452 / 2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு பள்ளியில் டென்னிஸ் அகாடமி ஆரம்பிப்பது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	30420
நாள்	30.04.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.
	...அங்கே குமரி மாவட்டத்திலே உறுப்பினர் சொல்கிற பள்ளியிலே டென்னீஸ் அகாடமி ஆரம்பிப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.
8. துறையின் பதில்	கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு அரசு மேனிலைப் பள்ளிகளில் டேபிள் டென்னிஸ் விளையாட்டில் மாணவ, மாணவிகள் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் மாவட்ட, மாநில மற்றும் அகில இந்திய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளனர்.
	மேற்படி பள்ளியில் ஏற்கனவே இரண்டு மேஜைப்பந்து விளையாட்டிற்கான மேஜைகளும் சிறிய அளவில் அறையும் இருந்தது. 2003–ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிறுசேமிப்பு நிதியிலிருந்து ஒரு மேஜைப்பந்து விளையாட்டிற்கான மேஜை வழங்கியுள்ளார்கள்.

2004–ம் ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் மேற்படி பள்ளியில் மேஜைப்பந்து விளையாட்டிற்காக கூடுதலாக ஒரு டேபிள் டென்னிஸ் மேஜையும், பேட் மற்றும் பந்துகளும் வாங்கி வழங்கப்பட்டது.

2004–ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கூடுதலாக 4 மேஜைப்பந்து மேஜைகள் மேற்படி விளவங்கோடு அரசு பள்ளிக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8.50 லட்சத்தில் டேபிள் டென்னிஸ் உள் விளையாட்டு அரங்கமும் மேற்படி பள்ளியில் அமைக்கப்பட்டது. இப்பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் Talent Development Centre செயல்பட்டு வருகிறது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 12.11.2007

10.குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கன்னியாகுமரி மாவட்டம், கிராத்தூரிலுள்ள தேசிய கால்நடை மேம்பாட்டு நிறுவனத்தின் கிளை நிலையம் தரம் உயர்த்தப்படுதல் குறித்து.

1. வரிசை எண்.	9
2. துறையின் பெயர்	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை
3. உறுதிமொழி எண்.	512 / 2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், கிராத்தூரிலுள்ள தேசிய கால்நடை மேம்பாட்டு நிறுவனத்தின் கிளை நிலையம் தரம் உயர்த்தப்படுதல் குறித்து.
5. 2003–2004ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை (கால்நடை பராமரிப்பு) யின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
நாள்	06.05.2003
6. உறுப்பினர் பெயர்	திரு.டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ... அதனை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
8. துறையின் பதில்	கிராத்தூர் கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு 20.02.2004 முதல் செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் நெய்யாறு இடது கரைக் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பரக்குன்று பாலம் உடைந்திருப்பது அதனை புதிதாகக் கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பது குறித்து

1. வரிசை எண்.	10
2. துறையின் பெயர்	நெடுஞ்சாலைத் துறை
3. உறுதிமொழி எண்.	640 / 2003
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் நெய்யாறு இடது கரைக் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பரக்குன்று பாலம் உடைந்திருப்பது அதனை புதிதாகக் கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பது குறித்து
5. உடுக்குறியிடாத வினா எண்	214
நாள்	10.05.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம். பொதுப்பணி, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்.
	...நபார்டு நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று இப்பாலத்தையும் அது அமைந்துள்ள மருதங்கோடு சாலையையும் சுமார் ரூ.112.00 இலட்சம் செலவில் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.
8. துறையின் பதில்	பொருளில் குறிப்பிட்டுள்ள சாலையானது இக்கோட்டத்தால் பராமரிக்கப்படும் மருதன்கோடு சாலை கி.மீ.0/0–4/6 ஆகும். இச்சாலையில் பரக்குன்று என்னுமிடத்தில் நெய்யாற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்தை திரும்ப கட்டுவதற்கும் சாலை அகலப்படுத்துவதற்கும் ரூ.92.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தம் கோரி 2003–2004–ம் ஆண்டு வேலைகள் அனைத்தும் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், பெண்கள் ஆழ்கடலிலே சென்று மீன்பிடித்தொழில் செய்ய மானிய விலையிலே படகு, வலை மற்றும் டீசல் போன்ற உபகரணப் பொருட்கள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பது குறித்து

1. வரிசை எண்.	11
2. துறையின் பெயர்	கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை
3. உறுதிமொழி எண்.	40 / 2004
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், பெண்கள் ஆழ்கடலிலே சென்று மீன்பிடித்தொழில் செய்ய மானிய விலையிலே படகு, வலை மற்றும் டீசல் போன்ற உபகரணப் பொருட்கள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண்	33957
நாள்	10.02.2004
6. உறுப்பினர் பெயர்	டாக்டர் தே. குமாரதாஸ்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்.
	...இந்தத் திட்டத்தை எந்த விதத்திலே செயல்படுத்துவது என்பதை இந்த அரசு முடிவு செய்யும்.
8. துறையின் பதில்	கன்னியாகுமரி மாவட்ட மீனவ கிராமத்தை பொறுத்தமட்டில் மீனவ மகளிர்கள் எவரும் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதில்லை. இதனால் மானிய விலையில் படகு, வலை மற்றும் டீசல் போன்ற உபகரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக அரசிடமிருந்து ஆணைகள் ஏதும் பெறப்படவில்லை. இப்பொருள் குறித்து மீனவ மகளிர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு நகராட்சி என்று அமைக்கப்பட்டிருப்பதை மாற்றி மீண்டும் கிராம பஞ்சாயத்தாக மாற்றப்படுமா என்பது குறித்து

1. வரிசை எண்.	12
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	180 / 2004
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு நகராட்சி என்று அமைக்கப்பட்டிருப்பதை மாற்றி மீண்டும் கிராம பஞ்சாயத்தாக மாற்றப்படுமா என்பது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	22878
நாள்	27.07.2004
6. உறுப்பினர் பெயர்	டாக்டர். தே. குமாரதாஸ்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர். ...மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.
8. துறையின் பதில்	கொல்லங்கோடு பேரூராட்சி நகராட்சியாக அமைக்கப்படவில்லை. கிராமப் பஞ்சாயத்தாகவும் மாற்றப்படவில்லை. தற்போதும் பேரூராட்சியாகவே செயல்பட்டுவருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைத் தருவதற்கான திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து

1. வரிசை எண்.	13
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	397 / 2005
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைத் தருவதற்கான திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண்	67335
துணை வினா	
நாள்	06.04.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்.
	...இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்
8. துறையின் பதில்	நாகர்கோவில் நகராட்சி பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் கழகத்தை தொழில் ஸ்தாபனமாக மாற்றி அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவது குறித்து

1. வரிசை எண்.	14
2. துறையின் பெயர்	சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
3. உறுதிமொழி எண்.	528 / 2005
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் கழகத்தை தொழில் ஸ்தாபனமாக மாற்றி அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண்	30277
துணை வினா	
நாள்	22.09.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. ஜே. ஹேமச்சந்திரன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஆர். வைத்தியலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.
	...நடவடிக்கை எடுக்கப்படும்
8. துறையின் பதில்	ரப்பர் ஒரு மலைத் தோட்டப்பயிர் ஆகும். எனவே அரசு ரப்பர் கழகத்தில், தோட்ட தொழிலாளர் சட்டம் 1951 மற்றும் தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகள் 1955 அமுல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஏனைய தொழிலாளர் சட்டங்களும் முறையாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே அரசு ரப்பர் கழகம், தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்திய ஒரு தொழில் நிறுவனமாகும்.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10.குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு படகுகள் கட்டிக்கொடுப்பது குறித்து

1. வரிசை எண்.	15
2. துறையின் பெயர்	கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை
3. உறுதிமொழி எண்.	529 / 2005
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு பட்குகள் கட்டிக்கொடுப்பது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	34900
நாள்	22.09.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. ஜே. ஹேமச்சந்திரன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர். ...செய்து கொடுக்கப்படும்
8. துறையின் பதில்	சின்னமுட்டம் பகுதியில் 59 கட்டுமரங்களும், 288 நபர்களின் மீன்பிடிவலைகளும், 2 இயந்திர படகுகளும் சுனாமியால் சேதமடைந்தன. சேதமடைந்த 59 கட்டுமரங்களுக்கு ரூ.5,06,000/– யும் மீன் வலைகளுக்கு ரூ.28,80,000/–யும் முழுவதும் சேதமடைந்த இரண்டு இயந்திர படகுகளுக்கு பத்து லட்சம் ரூபாயும், மொத்தம் 2,66,16,000/– ரூபாய் நஷ்டஈடாக அரசு வழங்கியுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிநவீன கருவிகளுடன் அமைப்பது குறித்து.

1. வரிசை எண்.	16
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	595 / 2006
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிநவீன கருவிகளுடன் அமைப்பது குறித்து.
5. 2006–2007–ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	17.08.2006
6. உறுப்பினர் பெயர்	–
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர். ...ரூ.1.5 கோடி செலவில் அமைக்கப்படும்.
8. துறையின் பதில்	அரசு ஆணை எண்.143 சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை நாள்: 23.08.2006–ன்படி பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துமனையில் மத்திய அரசு நிதி ரூ.150 இலட்சம் செலவில் விபத்து மற்றும் மறுஅதிர்வு காய சிகிச்சைப்பிரிவு அதி நவீன கருவிகளுடன் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு அதற்கான பணிகள் துவங்கி தற்போது முடியும் தருவாயில் உள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது

கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எய்ட்ஸ் Test-க்காக இரத்தப் பகுப்பு மையத்தினை அமைப்பது குறித்து.

1. வரிசை எண்.	17
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	605 / 2006
4. பொருள்	கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எய்ட்ஸ் Test-க்காக இரத்தப் பகுப்பு மையத்தினை அமைப்பது குறித்து.
5. 2006–2007–ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
நாள்	17.08.2006
6. உறுப்பினர் பெயர்	–
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர். ...அமைக்கப்படும்.
8. துறையின் பதில்	கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது எய்ட்ஸ் பரிசோதனை செய்வதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட கலந்தாய்வு மற்றும் பரிசோதனை மையம் என்ற பிரிவு செயல்பட்டு வருகிறது (IC TC) மேலும் எய்ட்ஸ் பாதித்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக (Anti Retroviral Therapy ART centre) என்ற மையமும் செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தொழிற்சாலை தொடங்குவது குறித்து

1. வரிசை எண்.	18
2. துறையின் பெயர்	தொழில் துறை
3. உறுதிமொழி எண்.	637 / 2005 & 1279 / 2006
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தொழிற்சாலை தொடங்குவது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	30277
நாள்	27.09.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. டி.மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர். ...அதனை தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	தோவாளை வட்டம் செண்பகராமன் புதூரில் டிட்கோ நிறுவனம் தனியாருடன் இணைந்து தமிழ்நாடு இண்டஸ்டிரியல் பார்க் (ரப்பர்) லிமிடெட் என்ற பொது நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக அதற்குரிய நிலம் கையகப்பட்டுள்ளது. நில மேம்பாட்டு பணிகள் நிறைவடைந்து விட்டன.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டம், சுற்றுலா நீர்வீழ்ச்சியான திற்பரப்பில் Rope Car அமைப்பது குறித்து

1. வரிசை எண்.	19
2. துறையின் பெயர்	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
3. உறுதிமொழி எண்.	659 / 2006
4. பொருள்	கன்னியாகுமரி மாவட்டம், சுற்றுலா நீர்வீழ்ச்சியான திற்பரப்பில் Rope Car அமைப்பது குறித்து
5. உடுக்குறியிட்ட வினா எண்	931
நாள்	18.08.2006
6. உறுப்பினர் பெயர்	திருமதி ரா. லீமா ரோஸ்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்.
	...ரூ.20 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று முடியக்கூடிய நிலையில் இருக்கிறது.
8. துறையின் பதில்	திற்பரப்பு அருவியில் ரோப் கார் அமைப்பதற்கான சாத்திய கூறுகள் இல்லை. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக வாகன நிறுத்துமிடம் மற்றும் தங்கும் விடுதி புனரமைத்தல் பணிகளுக்கு ரூ.20.00 லட்சம் மேற்கு தொடர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2005–2006 ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் திற்பரப்பு அருவித்திருவிழா முதன் முறையாக கடந்த 25.08.2007 மற்றும் 26.08.2007 ஆகிய இரு நாட்கள் அரசு விழாவாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. திற்பரப்பு அருவியில் வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு கூடுதல் வசதி செய்திட மத்திய அரசு நிதி உதவி பெறுவதற்கான திட்ட மதிப்பீடு தயாரித்து வழங்க உதவி இயக்குநர் பேரூராட்சி அவர்களுக்கு கடிதம் மூலம் வேண்டப்பட்டுள்ளது. இதுபோல் மாவட்ட நிர்வாகம் மூலம் பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	12.11.2007
1. வரிசை எண்.	65
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	722 / 2003
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, வண்ணார்குளம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	15946
நாள்	10.05.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித்துறை அமைச்சர். ...தகுதி, தேவை மற்றும் நிதியாதார அடிப்படையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், இருக்கன்துறை ஊராட்சியில் வண்ணார்குளம் கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்கு ரூ.6.82 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 10,000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 9/2006–ல் நிறைவேற்றப்பட்டு ஏற்கனவே ஊராட்சியின் வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் பேருந்து வசதி செய்து கொடுப்பதற்காக போக்குவரத்துக் கழகத்திற்கு அதிக புது பேருந்துகள் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	66
2. துறையின் பெயர்	போக்குவரத்துத் துறை
3. உறுதிமொழி எண்.	744 / 2003
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் பேருந்து வசதி செய்து கொடுப்பதற்காக போக்குவரத்துக் கழகத்திற்கு அதிக புது பேருந்துகள் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	15946
நாள்	10.05.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் .... புதிய பேருந்துகள் முன்னுரிமை அடிப்படையில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	2006–2007 ஆண்டில் 8 புதிய பேருந்துகளும், 2007–2008-ல் அக்டோபர் 31 வரை 6 புதிய பேருந்துகளும், சேரன்மகாதேவி தொகுதி வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. இன்னும் பல புதிய பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 18–வது வார்டு மன்னராஜா கோவில் தெரு, பழைய பஞ்சாயத்து காலனியில் 40 ஆண்டுகளாக ஓலை வீடுகளில் வசித்து வரும் மக்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	67
2. துறையின் பெயர்	எரிசக்தித் துறை
3. உறுதிமொழி எண்.	755 / 2003
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 18–வது வார்டு மன்னராஜா கோவில் தெரு, பழைய பஞ்சாயத்து காலனியில் 40 ஆண்டுகளாக ஓலை வீடுகளில் வசித்து வரும் மக்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	1416
நாள்	10.05.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.
	...மின் அளவி பொருத்தி மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பம் பதிவு செய்தால் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, மன்னராஜ கோவில் தெருவில் பழைய பஞ்சாயத்து காலனியில் பேரூராட்சியின் தீர்மான நகல் பெறப்பட்ட வீடுகளுக்கு குடியிருப்போர்களின் பெயர்களில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 18–வது வார்டு மன்னராஜா கோவில் தெரு, பழைய பஞ்சாயத்து காலனியில் 40 ஆண்டுகளாக ஓலை வீடுகளில் வசித்து வரும் மக்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	68
2. துறையின் பெயர்	நெடுஞ்சாலைத் துறை
3. உறுதிமொழி எண்.	853 / 2003
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கன்னியாகுமரி உவரி சாலையிலிருந்து கூத்தன்குழி கிராமத்திற்கு செல்லும் சாலையை செப்பனிட நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	16189
நாள்	03.11.2003
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர். ...இதர மாவட்டச் சாலைப் பகுதிகள் சீரமைத்தல் கட்டம் 3–ல் ரூ.9.20 இலட்சங்களுக்கு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.
8. துறையின் பதில்	உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது. இக்கோட்டத்தினை சார்ந்த மாவட்ட இதர சாலையான தூத்துக்குடி – திருச்செந்தூர் – கன்னியாகுமரி சாலையிலிருந்து பிரிந்து கூத்தங்குளி செல்லும் சாலை கி.மீ.0/0–2/4 ஆகும். இச்சாலையில் ரூ.4.36 இலட்சம் மதிப்பீட்டில் சாலை 2002–2003.ல் செப்பனிடப்பட்டுள்ளது. மேலும் இச்சாலையினை சுனாமி திட்டத்தின்கீழ் ஒரு வழித்தடத்திலிருந்து இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 31.10.2007–ல் கோரப்பட்டுள்ளது
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, முத்தம்மாள்புரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	69
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	60 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, முத்தம்மாள்புரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	12055
நாள்	10.02.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. பி.எச். பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்.
	...இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பணிகள் 9/2003-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சியிலுள்ள மடத்தூர், முத்தம்மாள்புரம் கிராமத்தின் மக்கள் தொகை 2003 மறு ஆய்வின்படி 105 ஆகும். 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்தாங்கட்டளை கீழப்பாவூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தை நீராதாரமாகக் கொண்டு, சங்கரலிங்கபுரம் மற்றும் முத்தாம்மாள்புரம் ஆகிய இரண்டு கிராமத்திற்கும் சேர்த்து 10000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, கடனா ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீராக வழங்கப்படுகிறது. தற்பொழுது இத்திட்டம் பராமரிப்புக் கோட்டம், திருநெல்வேலி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சி கரிசூழ்தான்மங்கலம் கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் செய்ய விசை பம்பு மூலம் கிணறுகள் அமைத்து விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	70
2. துறையின் பெயர்	ஊரக வளர்ச்சித் துறை
3. உறுதிமொழி எண்.	130 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சி கரிசூழ்தான்மங்கலம் கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் செய்ய விசை பம்பு மூலம் கிணறுகள் அமைத்து விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	27054
நாள்	23.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.
	...மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி கிடைக்கப்பெற்றதும், மேற்படி பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
8. துறையின் பதில்	தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிக் கழகம் மூலம் நிதி உதவி பெற்று சம்பந்தப்பட்ட பணி 2003–2004 ஆம் ஆண்டு முழுமையாக முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்படுவது குறித்து.

1. வரிசை எண்	71
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	161 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்படுவது குறித்து.
5. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	26.07.2003
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். ...வள்ளியூர் அரசு மருத்துவமனையில் ரூ.71.89 இலட்சம் மொத்த செலவில் 10 படுக்கை வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் மருந்தகம் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு ரூ.71.89 லட்சம் மொத்த செலவில் 10 மற்றும் 12 படுக்கை வசதியுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்பட்டு 22 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக கட்டி முடிக்கப்பட்டு 06.04.2007 முதல் செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி வடிநிலத்திலுள்ள அனுமான் நதி உப வடிநிலத்தில் ஓர் ஒருங்கிணைந்த நீர்வளத்தை முன்னேற்றும் திட்டத்தினை செயலாக்குதல் குறித்து.

1. வரிசை எண்	72
2. துறையின் பெயர்	பொதுப்பணித் துறை
3. உறுதிமொழி எண்.	186 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி வடிநிலத்திலுள்ள அனுமான் நதி உப வடிநிலத்தில் ஓர் ஒருங்கிணைந்த நீர்வளத்தை முன்னேற்றும் திட்டத்தினை செயலாக்குதல் குறித்து.
5. 2004–2005 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	27.07.2004
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்.
	...அனுமான் நதி வடிநிலத்தில் உள்ள 10,000 ஏக்கர் நிலங்களும் கூடுதல் பாசன வசதி பெறும்.
8. துறையின் பதில்	நெல்லை மாவட்டம் தாமிரபரணி வடிநிலத்தில் உள்ள அனுமான் நதி உப வடிநிலத்தில் ஓர் ஒருங்கிணைந்த நீர்வளத்தை முன்னேற்றும் திட்டம் ரூ.36.969 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் அரசாணை எண்.33 பொதுப்பணி (டபிள்யு ஆர்1) துறை நாள்:30.01.2004–ல் பெறப்பட்டு, இவ்உபவடிநிலத்தில் உள்ள 14 அணைக்கட்டுகள், கால்வாய் மற்றும் குளங்கள் ஆகியவைகளின் மேம்பாட்டு பணிகள் யாவும் 31.03.2005–ல் முடிக்கப்பட்டு விட்டது. இந்த ஒருங்கிணைந்த நீர்வளத்தை முன்னேற்றும் திட்டத்தால், அனுமான் நதி உபவடிநிலத்தில் உள்ள 10200 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதி மேலப்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன் வருமா என்பது குறித்து.

1. வரிசை எண்	73
2. துறையின் பெயர்	கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை
3. உறுதிமொழி எண்.	192 / 2004
4.. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதி மேலப்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன் வருமா என்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்	19940
நாள்	28.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு.டி.பி.எம். மைதீன்கான்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.
	...அங்கே தற்போதுள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த அரசின் நிதி நிலைமைக்கேற்ப விரைவில் பரிசீலிக்கப்படும்.
8. துறையின் பதில்	அரசாணை எண்.148, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள்: 08.12.2004-ன் வழி மேலப்பாளையம் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு 01.01.2005 முதல் கால்நடை மருந்தகமாக செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகரத்திலுள்ள பாரதியார் தெரு, பரசுராமதெரு ஆகியவற்றில் கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் புதிய அடிகுழாய்கள் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது குறித்து.

1. வரிசை எண்.	74
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	215 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகரத்திலுள்ள பாரதியார் தெரு, பரசுராமதெரு ஆகியவற்றில் கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் புதிய அடிகுழாய்கள் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்	21126
நாள்	29.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. எம். சுப்பையா பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். ...வரும் நிதியாண்டில் அல்லது அரசு நிதியுதவி பெற்றோ அல்லது நகராட்சி நிதி நிலையைப் பொறுத்தோ பணிகள் மேற்கொள்ளப்படும்
8. துறையின் பதில்	கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் உள்ள பரசுராமபுரம் தெருவில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தலா ஒவ்வொரு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி தெருவில் இருபுறமும் கழிவுநீர் வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளது.

மாவடிக்கால் பாரதியார் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் நல்லமுறையில் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி தெருவில் சுவர்ண ஜெயந்தி (SJSRY) திட்டத்தின் கீழ் இருபுறமும் வடிகால்கள் அமைக்கப்பட்டு நல்லமுறையில் உள்ளது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 14.11.2007

10. குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உறுமண்குளம் ஊராட்சி, பெட்டைகுளம் கிராமத்திற்கு அரசு மருத்துவர்கள் வந்து பொது மக்களுக்கு சிகிச்சை அளித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	75
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	225 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உறுமண்குளம் ஊராட்சி, பெட்டைகுளம் கிராமத்திற்கு அரசு மருத்துவர்கள் வந்து பொது மக்களுக்கு சிகிச்சை அளித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்	8664
நாள்	29.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். ...இதில் நடவடிக்கை எடுக்கப்படும்
8. துறையின் பதில்	பெட்டைக்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. கிராம சுகாதார செவிலியர் அங்கே தங்கியிருந்து மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். பெட்டைக்குளம் துணை சுகாதார நிலையத்தைச் சேர்ந்த பெருங்குளம் உறுமன்குளம், நம்மதபுரம், அணைக்கரை ஆகிய கிராமங்களுக்கு பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் கிராமப்புற தொலைநோக்கு மருத்துவ முகாம் (Outreach Medical Services) மருத்துவ அலுவலரால் பிரதி மாதம் இரு முறை நடமாடும் மருத்துவக் குழு மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியரால் முகாமிட்டு சிகிச்சை அளித்து வருகின்றனர்.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், பழத்தோட்ட அருவிக்கு செல்லும் சாலை பழுதடைந்துள்ளதை புதுப்பித்து செப்பனிட்டுத் தரப்படுமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	76
2. துறையின் பெயர்	சுற்றுச்சூழல் (ம) வனத் துறை
3. உறுதிமொழி எண்.	296 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், பழத்தோட்ட அருவிக்கு செல்லும் சாலை பழுதடைந்துள்ளதை புதுப்பித்து செப்பனிட்டுத் தரப்படுமா என்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்	50492
துணை வினா	
நாள்	31.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. எம். சுப்பையா பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். ...உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநேல்வேலி மாவட்டம், குற்றாலம் பழத்தோட்டத்தின் அருகில் வனத்துறை கட்டுப்பாட்டிலுள்ள அருவி தற்போது பார்வையாளர்களால் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டுள்ளது. பண்ணையில் பணிபுரியும் பணியார்களால் பண்ணைப் பணிகளுக்காக மட்டுமே பாதை பயன்படுத்தப்படுகிறது. எனவே, தற்போது அந்த பாதையை செப்பனிட வேண்டிய அவசியம் எழவில்லை.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை ஆற்று (0/0–0/4) சாலையைப் புதுப்பித்து பராமரிப்பு செய்வது குறித்து.

1. வரிசை எண்.	77
2. துறையின் பெயர்	நெடுஞ்சாலைத் துறை
3. உறுதிமொழி எண்.	347 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை ஆற்று (0/0–0/4) சாலையைப் புதுப்பித்து பராமரிப்பு செய்வது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	4573
நாள்	31.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர். ...ரூ.1.16 லட்சம் செலவில் செப்பனிட தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
8. துறையின் பதில்	கரிசூழ்ந்த மங்கலம்–குரங்குமடம் சாலை கி.மீ.0/0–2/9 மற்றும் 3/9–7/1வரை தனிப்பழுது பார்த்தல் பணிக்கு ரூ.19.60 இலட்சத்திற்கு காலமுறை புதுப்பித்தல் திட்டம் 2005–2006 தலைப்பின் கீழ் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. சாலை தற்போது போக்குவரத்திகு உகந்த நிலையில் உள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம் ஆனைகுளம்கிராமம் வீற்றிருந்தான் குளத்தினை மரமாத்து செய்வது குறித்து.

1. வரிசை எண்.	78
2. துறையின் பெயர்	பொதுப்பணித் துறை
3. உறுதிமொழி எண்.	348 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம் ஆனைகுளம் கிராமம் வீற்றிருந்தான் குளத்தினை மராமத்து செய்வது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	5176
நாள்	31.07.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.
	...நிதி நிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம் – ஆனைகுளம் கிராமத்திலுள்ள வீற்றிருந்தான்குளம் 2006–2007 ஆம் நிதியாண்டில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் மராமத்து வேலைகள் மேற்கோள்ளப்பட்டது. மேற்படி பணியில் மடை திரும்ப கட்டும் பணி கால்வாய் தூர்வாரும் பணி மற்றும் குளக்கரை பலப்படுத்தும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்கபுரம்–பெருங்கண்ணன் குளம் சாலையில் கி.மீ. 1/8 பாலம் கட்டுதல் குறித்து.

1. வரிசை எண்.	79
2. துறையின் பெயர்	நெடுஞ்சாலைத் துறை
3. உறுதிமொழி எண்.	442 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம்–பெருங்கண்ணன்குளம் சாலையில் கி.மீ.1/8–ல் பாலம் கட்ட அரசு முன்வருமா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	15837
நாள்	17.11.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.
	...நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இப்பணியினை செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	மேற்காணுமிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.13.20 இலட்சத்திற்கு, 2004–ல் செய்து முடிக்கப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி கடையம் முக்கடல் (கி.மீ.0/0–0/8) சாலையில் மணல் காட்டலூர் பேருந்து நிறுத்தத்தில் தார் சாலை அமைக்கும் பணியை துவக்குவதல் குறித்து.

1. வரிசை எண்.	80
2. துறையின் பெயர்	நெடுஞ்சாலைத் துறை
3. உறுதிமொழி எண்.	527 / 2004
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி கடையம் முக்கடல் (கி.மீ.0/0–0/8) சாலையில் மணல் காட்டலூர் பேருந்து நிறுத்தத்தில் தார் சாலை அமைக்கும் பணியை துவக்குவதல் குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	4542
நாள்	22.11.2004
6. உறுப்பினர் பெயர்	திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர். ...ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் அளிக்கப் பெற்றவுடன் வேலை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	சட்டமன்ற உறுதிமொழியில் குறிப்பிட்டுள்ள கடையம் முக்கூடல் சாலையில் மணல்–காட்டலூர் பேருந்து நிறுத்தத்தில் தார் சாலை அமைக்க கோரப்பட்டுள்ள பகுதி கி.மீ. 8/0–9/0 ஆகும். இது ஓர் இதர மாவட்ட சாலையாகும். இப்பகுதி 2004–2005ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி சாலை போக்குவரத்திற்கு உகந்த நிலையில் உள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், பளையங்கோட்டை தொகுதி நடுவக்குறிச்சி பர்கிட் மாநகரத்தில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து வருகிற பகிர்மான குழாய்களை மாற்றி அமைத்தல் குறித்து.

1. வரிசை எண்.	81
2. துறையின் பெயர்	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3. உறுதிமொழி எண்.	16 / 2005
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், பளையங்கோட்டை தொகுதி நடுவக்குறிச்சி பர்கிட் மாநகரத்தில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து வருகிற பகிர்மான குழாய்களை மாற்றி அமைத்தல் குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா நாள்	19936 03.02.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. டி.பி.எம். மைதீன்கான்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். ...அதை உடனடியாகப் பார்வையிட்டு அந்தக் குழாய்களை மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. துறையின் பதில்	பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுவக்குறிச்சி ஊராட்சியில் பர்கிட்மாநகர் கூட்டுக்குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தில் கான்சாபுரம் மற்றும் 15 வழியோரக்கிராமங்கள் பயன்பெற்று வந்தது. மேற்கூறிய மொத்தக் கிராமங்களுக்கும் நிரேற்றும் பொழுது நீரேற்றுக் குழாயில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்ட காரணத்தால் பர்கிட்மாநகர் மற்றும் நடுவக்குறிச்சி பாளையஞ்செட்டிகுளம் பகுதிகளுக்கு தனிக்குழாயாகவும் மீதி உள்ள வழியோர கிராமங்களுக்கு தனிக்குழாயாகவும் அமைக்கப்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு தற்பொழுது பராமரிப்புக்கோட்டம், திருநெல்வேலியின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்வது குறித்து.

1. வரிசை எண்.	82
2. துறையின் பெயர்	ஊரக வளர்ச்சித் துறை
3. உறுதிமொழி எண்.	37 / 2005
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்வது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	27040
துணை வினா	
நாள்	03.02.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.
	...2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கல் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னும் 8 மாத காலத்திற்குள் நிறைவு பெற்று விடும்
8. துறையின் பதில்	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2 லட்சம் லிட்டர் கொள்ளவு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் 23.06.2005 ஆம் தேதியில் பணி முடிக்கப்பட்டு பேரூராட்சியில் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் யானைகளும், பன்றிகளும் தென்னையைக் கடுமையாக அழித்து வருவதைத் தடுக்க மலைவாழ் இன இளைஞர்கள் குழுக்களும், வனத்துறை அதிகாரிகளும் இணைந்து யானைக் கூட்டத்தை வனத்திற்குள் திரும்ப அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

1. வரிசை எண்.	83
2. துறையின் பெயர்	சுற்றுப்புறம் (ம) வனத் துறை
3. உறுதிமொழி எண்.	176 / 2005
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் யானைகளும், பன்றிகளும் தென்னையைக் கடுமையாக அழித்து வருவதைத் தடுக்க மலைவாழ் இன இளைஞர்கள் குழுக்களும், வனத்துறை அதிகாரிகளும் இணைந்து யானைக் கூட்டத்தை வனத்திற்குள் திரும்ப அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்	1911
துணை வினா	
நாள்	16.03.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. எம். சுப்பையா பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். ...அரசு சிந்திக்கும்.
8. துறையின் பதில்	திருநேல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சரகத்திற்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கீழிறங்கி விவசாய பயிர்கள் தென்னந் தோட்டங்களை அழிக்கும் யானைகள், காட்டு பன்றிகள் ஆகியவைகளை கடையநல்லூர் வனச்சரக அலுவலர்களும், அருகிலுள்ள ரகுமானியா புரம், பார்வதிபுரம், கருப்பாநதி பளியர் குடியிருப்பு, புன்னையாபுரம், முத்துசாமிபுரம், கிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ள வனக்குழு உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாயிகளும், கூலியாட்களும் சேர்ந்து வனத்துறை மூலம் விநியோகம் செய்யப்பட்டு வரும் வெடி மூலம் மிருகங்கள் காட்டிற்குள் திருப்பி விரட்டப்பட்டு அவ்வப்போது சேதங்கள் தடுக்கப்பட்டு வருகிறது. மேலும், காட்டுயானைகள் மூலம் சேதம் அடையும் பயிர்களுக்குரிய நிவாரணத் தொகையினையும்

சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அரசு மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு மூலம் காப்புக் காட்டிலிருந்து மிருகங்கள் விவசாயபகுதிக்குள் வராமல் தடுக்க நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சூரிய ஒளி மின்வேலி அமைக்க 75% செலவில் மானியம் கொடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக செயல் படுத்தப்பட்டுவருகிறது. இது காப்புக்காட்டின் எல்லை முழுவதுமாக அமைத்து விட்டால் காட்டு விலங்குகள் விவசாய எல்லையில் நுழைந்து சேதப்படுத்துவதை முழுமையாக தடுக்க முடியும். எனவே, விவசாயிகள் ஒற்றுமையாக செயல்பட்டு 25% செலவுத் தொகையை செலுத்தும் பட்சத்தில் அரசும் 75% மானியம் கொடுத்து காப்புக் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து பகுதிகளிலும் சூரியஒளி மின்வேலி அமைத்து காட்டு யானைகள் பன்றிகள் வராமல் தடுக்க முடியும்.

மேலும் அரசாணை எண்.338 சுற்றுப்புறம் மற்றும் வனம் (FR V) துறை நாள்: 05.12.2006–ன்படி 2006–07–ம் ஆண்டில் கடையநல்லூர் பிரிவில் 13 கி.மீ. தூரமும், மேக்கரை பிரிவில் 9 கி.மீ. தூரமும் சூரியஒளி மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி அரசாணையின் பகுதி–2 திட்டமாக கிருஷ்ணபுரம் கிழக்கு பகுதியில் 7.5 கி.மீ. தூரத்திற்கு டெண்டர் முடிவடைந்த நிலையில் உள்ளது.

மேலும், 2007–08–ம் ஆண்டிற்கு அரசாணை G.O.Ms.Mo.96 Planning, Development and Special initiatives (TC-1) Department Dated 05.07.2007 - ன்படி கடையநல்லூர் சரகத்தில் சொக்கம்பட்டி பீட்டில் 5 கி.மீ. தூரம் சூரியஒளி மின்வேலி அமைக்க டெண்டர் பணி முடிவடைந்த நிலையில் உள்ளது.

இவ்வாறாக கடையநல்லூர் சரகத்தில் வன உயிரினங்களின் அழிவிலிருந்து விவசாய பயிர்களை பாதுகாக்க சூரியஒளி மின்வேலி அமைத்தும், மேலும், சூரியஒளி மின்வேலி அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 14.11.2007

10. குழுவின் கருத்து — படித்துப் பதிவு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பது குறித்து.

1. வரிசை எண்.	84
2. துறையின் பெயர்	வருவாய்த்துறை
3. உறுதிமொழி எண்.	288 / 2005
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	1026
நாள்	29.03.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. எம். சுப்பையா பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர். ...அரசு ஆய்ந்து பார்க்கும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக பிரேரணை அரசுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டதில், அரசுக் கடித எண்.47438/ நிதி/கக2/98 நாள்: 20.08.1998-ன் மூலம், கடையநல்லூர் வட்டத் தலைமையிடமாக இல்லாததினால் அமைக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	படித்து பதிவு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி கள்ளிடைக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்து.

1. வரிசை எண்.	85
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	422 / 2005
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி கள்ளிடைக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	40296
நாள்	11.04.2005
6. உறுப்பினர் பெயர்	திரு. பி.எச். பால் மானோஜ் பாண்டியன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.
	...வருகின்ற நிதியாண்டில் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் 3 கி.மீ. தூரத்தில் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையும், 15 கி.மீ. தூரத்தில் சேரன்மகாதேவி அரசு மருத்துவமனையும், செயல்பட்டு வருவதால் சேரன்மகாதேவி கல்லிடைக் குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியம் கோலியாங்குளம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது குறித்து.

1. வரிசை எண்.	86
2. துறையின் பெயர்	பள்ளிக் கல்வித் துறை
3. உறுதிமொழி எண்.	534 / 2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியம் கோலியாங்குளம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	510
நாள்	17.08.2006
6. உறுப்பினர் பெயர்	திரு.மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர். ...அரசு பரிவோடு பரிசீலித்து அதற்காக ஆவன செய்யும்
8. துறையின் பதில்	2006–2007 ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நோயைக் கண்டறியும் நவீன எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதியை ஏற்படுத்துவது குறித்து.

1. வரிசை எண்.	87
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	567 / 2006
4. பொருள்	திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நோயைக் கண்டறியும் நவீன எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதியை ஏற்படுத்துவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	17.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர். ...ஏற்படுத்த உள்ளோம்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன எம்.ஆர்.ஐ.ஸ்கேன் 07.10.2007 அன்று மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு தற்சமயம் பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர். 31.10.2007 வரை 120 நோயாளிகளுக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுக்கப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிநவீன கருவிகளுடன் அமைப்பது குறித்து.

1. வரிசை எண்.	88
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை
3. உறுதிமொழி எண்.	594 / 2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிநவீன கருவிகளுடன் அமைப்பது குறித்து.
5. 2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	17.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர். ...ரூ.15 கோடி செலவில் அமைக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ரூ.1.5 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது. இப்பிரிவிற்காக இரண்டு ஆம்புலன்ஸ்கள் மற்றும் தளவாடச்சாமான்கள் பெறப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் இப்பிரிவு செயல்படும் என தெரிவிக்கப்படுகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மனநல சிகிச்சைப் பிரிவினை தரம் உயர்த்தும் பணிகளை துரிதப்படுத்துவது குறித்து.

1. வரிசை எண்.	89
2. துறையின் பெயர்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3. உறுதிமொழி எண்.	627 / 2006
4. பொருள்	திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மனநல சிகிச்சைப் பிரிவினை தரம் உயர்த்தும் பணிகளை துரிதப்படுத்துவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	17.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர். ...தரம் உயர்த்த பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மனநல சிகிச்சைப் பிரிவினை தரம் உயர்த்தும் பொருட்டு புதிய கட்டிடப்பணி (தொகை ரூ.49 லட்சம்) 20.11.2006 அன்று துவங்கப்பட்டு தற்போது பணி முடிவுறும் நிலையில் உள்ளது. 31.12.2007–க்கு முன்னதாக கட்டிடப்பணிகள் முடிவடையும் என பொதுப் பணித் துறை, (கட்டிட கட்டுமானம்) உதவிப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர், பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், தென்காசி, குற்றாலம், செங்கோட்டை சாலையில் 9 கி.மீ. நீளத்திற்கு நடப்பு ஆண்டில் இருவழித் தடமாக மாற்றப்படுவது குறித்து.

1. வரிசை எண்.	90
2. துறையின் பெயர்	நெடுஞ்சாலைத் துறை
3. உறுதிமொழி எண்.	836 / 2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர், பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், தென்காசி, குற்றாலம், செங்கோட்டை சாலையில் 9 கி.மீ. நீளத்திற்கு நடப்பு ஆண்டில் இருவழித் தடமாக மாற்றப்படுவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	21.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர். ...மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
8. துறையின் பதில்	சட்டமன்ற உறுதிமொழிக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருச்செந்தூர், பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், தென்காசி, குற்றாலம், செங்கோட்டை சாலையில் மொத்த நீளம் 91.60 கி.மீ. இக்கோட்டப் பராமரிப்பிலுள்ளது. இதில் 42.60 90.487, 92.050–134/200 ஆக மொத்தம் 90.037 கி.மீ. இரு வழித்தடமாக உள்ளது. மீதமுள்ள பகுதி 90.487–92.050 ஆக 1.563 கி.மீ. இடைவழி தடமாக உள்ளது. சி.ஆர்.ஐ.டி.பி. 2006–07 திட்டத்தில் இருவழி தடமாக அகலப்படுத்தப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், திருவம்பலாபுரத்தில் கால்நடை மருந்தகம் தொடங்குவது குறித்து.

1. வரிசை எண்.	91
2. துறையின் பெயர்	கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை
3. உறுதிமொழி எண்.	880/2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், திருவம்பலாபுரத்தில் கால்நடை மருந்தகம் தொடங்குவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
நாள்	22.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திருமதி பி. கீதாஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.
	...நீண்ட நாள் கோரிக்கையான கால்நடை மருந்தகம் தொடங்க உத்தரவிட்டுள்ளார்.
8. துறையின் பதில்	அரசு ஆணை எண்.126, கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத் (கா.ப.2) துறை, நாள்: 30.06.2006–ன் வழி திருவம்பலாபுரம் கிராமத்தில், கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு 16.12.2006 முதல் செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் செவித்திறன் குறையுடையோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பேசுவதற்கு பயிற்சி அளிக்க, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு மையம் ஏற்படுத்துவது குறித்து.

1. வரிசை எண்.	92
2. துறையின் பெயர்	சமூக நலன் (ம) சத்துணவுத் திட்டம்
3. உறுதிமொழி எண்.	907/2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டத்தில் செவித்திறன் குறையுடையோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பேசுவதற்கு பயிற்சி அளிக்க, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு மையம் ஏற்படுத்துவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	22.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, ஆலடி அருணா சமூக நலத்துறை அமைச்சர். ஒரு மையம் ஏற்படுத்தப்படும்.
8. துறையின் பதில்	31.01.2007 அன்று திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தாலுகா, நல்லூரில் TDTA அரசு மேல்நிலைப் பள்ளியில் செவித்திறன் குறையுடையோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பேசுவதற்கு பயிற்சி அளிக்க, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு மையம் துவக்கப்பட்டு, தற்சமயம் நன்கு செயல்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்த சமையல் அறைகளுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் பிரஷ்ர் குக்கர் ஆகியவை வழங்குவது குறித்து.

1. வரிசை எண்.	93
2. துறையின் பெயர்	சமூக நலன் (ம) சத்துணவுத் திட்டம்
3. உறுதிமொழி எண்.	910 / 2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்த சமையல் அறைகளுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் பிரஷ்ர் குக்கர் ஆகியவை வழங்குவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	22.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, ஆலடி அருணா சமூக நலத்துறை அமைச்சர். ...வழங்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டத்தில் முதல் கட்டமாக 300 குழந்தைகள் நல மையங்களுக்கு எரிவாயு இணைப்பு 29.04.2006 முதல் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது நடப்பாண்டில் 245 மையங்கள் தேர்வு செய்யப்பட்டு, எரிவாயு இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நெற்கட்டும் செவல் கிராமத்திலுள்ள மாவீரன் பூலித்தேவன் சிலை பராமரித்தல் குறித்து.

1. வரிசை எண்.	94
2. துறையின் பெயர்	செய்தி (ம) சுற்றுலாத் துறை
3. உறுதிமொழி எண்.	1067 / 2006
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நெற்கட்டும் செவல் கிராமத்திலுள்ள மாவீரன் பூலித்தேவன் சிலை பராமரித்தல் குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் சுற்றுலாத் துறை –செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	28.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். ...வர்ணம் பூசி பராமரிக்கப்படும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நெற்கட்டும் செவல் கிராமத்தில் உள்ள பூலித்தேவன் சிலை பிப்ரவரி மாதம் 2007–ம் ஆண்டு பொதுப்பணித் துறை மூலம் ரூ.30,000/– செலவில் வர்ணம் பூசப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பகுதியிலிருந்து தாமிரபரணி ஆற்றுக்குச் செல்லுகின்ற மேட்டுப் பகுதியிலிருந்து சங்கரன்கோயில் கழுகுமலை வழியாக புதியதாக அந்தப் பகுதியினுடைய உயரத்தைக் கணக்கிட்டு தண்ணீர் கொண்டு வருவது குறித்து.

1. வரிசை எண்.	95
2. துறையின் பெயர்	பொதுப்பணித் துறை
3. உறுதிமொழி எண்.	673 / 2007
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பகுதியிலிருந்து தாமிரபரணி ஆற்றுக்குச் செல்லுகின்ற மேட்டுப் பகுதியிலிருந்து சங்கரன்கோயில் கழுகுமலை வழியாக புதியதாக அந்தப் பகுதியினுடைய உயரத்தைக் கணக்கிட்டு தண்ணீர் கொண்டு வருவது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்	570
துணை வினா	
நாள்	23.04.2007
6. உறுப்பினர் பெயர்	திரு. வ. ராதாகிருஷ்ணன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர். ....அது குறித்து அரசு ஆய்வு செய்யும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் மலையிலிருந்து உற்பத்தியாகும் சிற்றாறு வடிநிலத்தின் குறுக்கே உள்ள பதினேழு அணைக்கட்டுகள் மூலம் பாசன வசதி பெறும் 118 குளங்கள் அனைத்தும் முழுவதும் நிரம்பாமல் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு முழு விவசாயம் செய்ய இயலாத நிலையில் இருந்து வருகிறது. எனவே உபரி நீர் இல்லாத காரணத்தால் சங்கரன்கோவில் கழுகுமலை பகுதிகளுக்கு புதிய கால்வாய் அமைத்து தண்ணீர் வழங்க இயலாது.

மேலும், சிற்றாறு செல்லும் ஆலங்குளம் பகுதியில் நிலமட்டம் கடல் மட்டத்திலிருந்து +100மீ. உள்ளது. சங்கரன்கோயில் பகுதி நிலமட்டம் +145 மீட்டரிலிருந்து, +147மீ. அளவிலும் கழுகுமலை நிலமட்டம் ஏறக்குறைய 112 மீட்டரிலிருந்து, 155 மீ. வரையிலும் மட்டளவாக உள்ளது. ஏறக்குறைய 55 மீ. கூடதல் உயரமாக உள்ளது. எனவே, தாழ்வாக உள்ள சிற்றாறு வடிநிலத்திலிருந்து, உபரி வெள்ளநீரை உயரமாக உள்ள சங்கரன்கோயில் கழுகுமலை பகுதிகளுக்கு புதிய கால்வாய் அமைத்து பாசன வசதி செய்ய பூகோள ரீதியாக சாத்தியக்கூறு இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

9. குழு ஆய்வு செய்த நாள் 14.11.2007

10. குழுவின் கருத்து படித்து பதிவு செய்யப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் பணகுடி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டியிருக்கும் விவசாய நிலங்களில் காட்டு விலங்குகள் புகுந்து அழிப்பதை தடுக்க சூரிய மின்வேலி அமைத்திடுவது குறித்து.

1. வரிசை எண்.	96
2. துறையின் பெயர்	சுற்றுசூழல் (ம) வனத் துறை
3. உறுதிமொழி எண்.	804/2007
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் பணகுடி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டியிருக்கும் விவசாய நிலங்களில் காட்டு விலங்குகள் புகுந்து அழிப்பதை தடுக்க சூரிய மின்வேலி அமைத்திடுவது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்	14174
நாள்	25.04.2007
6. உறுப்பினர் பெயர்	திரு. மு. அப்பாவு
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. ந. செல்வராஜ், வனத் துறை அமைச்சர்.
	...மின்வேலி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பகுதியை உள்ளடக்கிய மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் விளைபயிர்களை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதை நிரந்தரமாக தடுப்பதற்காக 2007–08–ம் ஆண்டில் ரூ.5.06 லட்சம் செலவில் 31/2 கி.மீ. தூரத்திற்கு சூரியமின்வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அரசிடமிருந்து போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் பட்சத்தில் எஞ்சியுள்ள வனப்பகுதிகளை சுற்றிலும் மின்வேலி அமைக்கும் பணி வனத்துறை மூலம் செய்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலே ஒரு புதிய கல்லூரி துவக்கப்படுவது குறித்து.

1. வரிசை எண்.	97
2. துறையின் பெயர்	உயர் கல்வித் துறை
3. உறுதிமொழி எண்.	920 / 2007
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலே ஒரு புதிய கல்லூரி துவக்கப்படுவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான உயர் கல்வித் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	04.05.2007
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித்துறை அமைச்சர்.
	...தென்காசியிலே 26 ஏக்கர் நிலமும் 1 கோடி ரூபாய் செலவிலே கட்டடமும் கட்டப்படும். இந்த ஆண்டு ஒரு புதிய கல்லூரி துவங்கப்படும்.
8. மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகளுடன் குழு கலந்துரையாடிய விவரம்	கல்லூரி கல்வி இணை இயக்குநர்: கல்லூரி நல்ல முறையில் இயங்குகிறது. எல்லா வசதிகளும் இருக்கின்றன.
	தலைவர்: எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள்?
	கல்லூரி கல்வி இணை இயக்குநர்: பி.காம்., பாடப்பிரிவில் 48 மாணவர்களும், பி.எஸ்.சி., பாடப்பிரிவில் 35 மாணவர்களும், பி.பி.ஏ., பாடப்பிரிவில் 48 மாவணர்களும் படிக்கிறார்கள். தற்போது மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
	தலைவர்: இந்த உறுதி மொழி நிறைவேற்றப்பட்டதாக கருதி கைவிடப்படுகிறது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் அமெரிக்காவினுடைய ATMAC நிறுவனம் இந்திய நிறுவனமான AMR இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து.

1. வரிசை எண்.	98
2. துறையின் பெயர்	தொழில் துறை
3. உறுதிமொழி எண்.	1044 / 2007
4. பொருள்	திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் அமெரிக்காவினுடைய ATMAC நிறுவனம் இந்திய நிறுவனமான AMR இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து.
5. 2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு முதலமைச்சரின் பதிலுரை	
நாள்	08.05.2007
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்.
	...மத்திய அரசுக்கு இந்த திட்டத்திற்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் திட்டப் பணிகள் தொடங்கும்.
8. துறையின் பதில்	திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக மத்திய அரசு மே மாதம் 2007 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) இறுதி ஒப்புதல் அளித்தது. தற்பொழுது டிட்கோ மற்றும் கூட்டு நிறுவனத்தின் வசம் சுமார் 2110 ஏக்கர் நிலம் உள்ளது. மீதி தேவையான சுமார் 410 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவது குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் தற்பொழுது கையிலுள்ள நிலத்தில் 7 குறிப்பிட்ட துறையை சார்ந்த தொழில்களுக்கான சிறப்பு பொருளாதார மண்டலத்தை உருவாக்க முறையான ஒப்புதல் பெற மத்திய அரசிடம் விண்ணப்பம் அளித்துள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	14.11.2007
10. குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

இணைப்பு 2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

17.8.2006	சென்னை
1.9.2006	சென்னை
5.12.2006	சென்னை
12.12.2006	மதுரை
13.12.2006	திண்டுக்கல்
2.1.2007 முதல் 11.1.2007 வரை	வடமாநிலங்களில் ஆய்வுப்பயணம் அந்தமான்–நிக்கோபர், கொல்கத்தா, புதுதில்லி, ஆக்ரா, அமிர்தசரஸ் மற்றும் மும்பை
9.4.2007	சென்னை
23.4.2007	சென்னை
13.6.2007	சென்னை
12.7.2007	கோயம்புத்தூர்
13.7.2007	
14.7.2007	நீலகிரி
2.8.2007	சென்னை
3.8.2007	
16.8.2007	காஞ்சிபுரம்
17.8.2007	விழுப்புரம்
18.8.2007	கடலூர்
6.9.2007	சென்னை
7.9.2007	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

27.9.2007 28.9.2007	வேலூர்
29.9.2007	திருவண்ணாமலை
18 ~~27.~~10.2007	சென்னை
30.10.2007 31.10.2007	சென்னை
12.11.2007 13.11.2007	கன்னியாகுமரி
14.11.2007	திருநெல்வேலி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து மூன்றாவது அறிக்கை

பிழை திருத்தப் பட்டியல்

பக்கம்	வரிசை எண்	வரி எண்	பிழை	திருத்தம்
25	8	6	கையகப்பட்டுள்ளது	கையகப்படுத்தப்பட்டுள்ளது
29	8	5	குறையுடை	குறையுடைய
34	8	10 பத்தி 3)	நாகர்கோவிலிருந்து	நாகர்கோவிலிலிருந்து
44	8	9	உயர்த்ததப்பட்டு	உயர்த்தப்பட்டு
81	8	6	கொள்ளவுள்ள	கொள்ளளவுள்ள
82	8	6	கொள்ளவுள்ள	கொள்ளளவுள்ள
86	8	11	கொள்ளவுள்ள	கொள்ளளவுள்ள
94	8	6	பணியார்களால்	பணியாளர்களால்
95	8	7	போக்குவரத்திகு	போக்குவரத்திற்கு
99	8	8	நிரேற்றும்	நீரேற்றும்
101	8	1 3	திருநேல்வேலி கீழிறிங்கி	திருநெல்வேலி கீழிறங்கி
120	இணைப்பு–2	4	27.10.2007	18.10.2007

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS